whether this document was sent to Yale University without any substitute copies of this record being kept here, in our State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்ல விரும்புகிறேன். 'எலிஹூ யேல்' என்பவர் சென்னையிலே 1687 முதல் 1692 வரை ஆளுநராகப் பணியாற்றி வந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவராகவும் இருந்து வந்தார். இந்தப் பதவிகள்மூலம் கிடைத்த ஊதியத்தின் மூலம் 1718-ல் அவதியுற்ற New England College -க்கு உதவியளித்தார். இவர் பெயரால் உள்ள யேல் கல்லூரியின் 250-வது ஆண்டு விழாவில் இவரது வாழ்க்கைக் குறிப்பை வைக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அதற்காக இதைக் கடனாகக் கேட்டு எழுதினார்கள். மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் யேல் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்த நேரத்தில் இந்தக் கோரிக்கை நேரிடையேயும் விடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் இங்கிருந்து அளிக்கப்பட்டது. அது அனுப்பப்படும் நேரத்திலே ஒருவேளை அது காணாமல் போய்விட்டால் என்ன செய்வது என்பதற்காகப் புகைப்படம் எடுக்கப்பட்டது. 17-6-1968-இல் அனுப்பப்பட்டது. அந்தப் புத்தகம் 14-3-1969-இல் நமக்குத் திரும்பக் கிடைத்து விட்டது.

எழும்பூர் கண்நோய் மருத்துவ மனை—நோயாளிகளுக்கு உணவு விநியோகம்.

***133 வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூர் கண் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மார்ச் 1968-ல் வழக்கம்போல் உணவு கிடைக்காமல் ஒரு தினம் கஷ்டப்பட்டார்களா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன?

(உ) இந்த நெருக்கடி எவ்வாறு சமாளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அந்த விஷயத்தை, நான் கிளப்பியுள்ள விஷயத்தை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அந்த விஷயம் அங்கு நடந்திருக்கிறது என்பது ஆதாரப் பூர்வமாகத் தெரிந்த காரணத்தால்தான் அந்தக் கேள்வி போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1968-ம் வருடம் மார்ச் 26-ம் தேதி அங்கு சமையல்நிலை ஊழியர்களின் ஒருவேளை வேலைநிறுத்தம் நடந்தது உண்மை. ஆனால்

நோயாளிகள் கஷ்டப்பட்டார்களா என்பது கேள்வி. அவர்கள் கஷ்டப்படவில்லை. ஏனென்றால் டாக்டர்கள் செவிலியர்கள், மற்ற ஊழியர்களைக்கொண்டு உணவுத் தயாரிப்பு வேலை முடிந்து விட்டது. வேலை நிறுத்தம் ஒரு வேளை நடந்தது. ஒரு நாள் முழுவதும் நடைபெறவில்லை. வேலை நிறுத்தம் ஒருவேளை நடைபெற்றாலும் நோயாளிகள் கஷ்டப்படவில்லை. அவர்கள் கஷ்டப்படாமல் இருக்கும் அளவுக்கு, டாக்டர்கள், செவிலியர்கள், ஊழியர்களைக் கொண்டு அந்தத் தொல்லை ஏற்படாத அளவுக்கு, பரிமாறப்பட்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இதுபோன்ற மருத்துவ மனைகளில் இந்தவிதமாக ஸ்டிரைக் செய்யப்படுவதன் காரணமாக எப்படியாவது நோயாளிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்பொழுது, அந்த ஸ்டிரைக் செய்தவர்கள் நியாயத்தின் அடிப்படையில் செய்தார்களா, அதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொதுப்படையாக துணை வினா அமைந்திருக்கிறது. கூடுமான வரையில் வேலைநிறுத்தம்பற்றி முன்கூட்டியே அறிந்தால், நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையெல்லாம் அரசும், மருத்துவத் துறை அதிகாரிகளும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, சட்டத்திற்குப் புறம்பாக, ஒழுங்குக்குப் புறம்பாக வேலைநிறுத்தம் செய்யப்பட்டால் தக்க நடவடிக்கைகள் அதுபற்றியும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, ஒருவேளை ஸ்டிரைக் செய்யப்பட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி ஒரு வேளை ஸ்டிரைக் செய்தது என்ன காரணத்தினால்? அப்படி அவர்கள் ஸ்டிரைக் செய்வதால் நோயாளிகளுக்குத்தான் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அதை நிவர்த்திக்க, அப்படிப்பட்ட நேரங்களிலே வேறு இடங்களிலேயிருந்து அவசர காலப் பணியாளர்களை வைக்க அரசாங்கம் முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு வேளை வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்பொழுது செவிலியர்கள், டாக்டர்கள், ஊழியர்கள் உணவுத் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டு நோயாளிகளுக்குக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. வேலை நிறுத்தத்திற்கான காரணம் இங்கு தரப்படவில்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

அடையாறு சென்ட்ரல் பாலிடெக்னிக்

*** 134 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு சென்ட்ரல் பாலிடெக்னிக் பள்ளியில் Fisheries Technology and Navigation பிரிவில் பயிற்சிக்காகப்